7th November 1966]

ஸோன் என்பதாக சுங்க வரி இல்லாமல் அந்தப் பகுதியைச் செய்ய வேண்டும் என்பது கருத்து. அது ஹார்பர் வந்த பிறகு தான் பரிசீலிக்கப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. சா. கணேசன் : கண்டாலா போன்ற இடங்களில் துறை முகம் அமைவதற்கு முன்னதாகவே ஃப்ரீ ட்ரேடிங் ஸோன் என்பதாக குறிப்பிடப்பட்ட நிலை எல்லாம் இருந்து வருகிறது. அந்தமாதிரி இப்போதே இதைக் குறிப்பிடுவதற்கு என்ன தடங்கல் உண்டு? அல்லது அப்படிச் செய்வதனல் தனிப்பட்ட முறையில் ஏதேனும் தீமை ஏற்படக்கூடும் என்று அரசாங்கம் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கருத்து அரசாங் கத்தினிடத்தில் இருக்கிறது. இந்தப் பகுதியை ஃப்ரீ ட்ரேடிங் ஸோனுக அறிவிக்க வேண்டும் என்பதாக நாஷனல் கவுன்சில் ஆஃப் அப்ளேட். அண்டு எக்கானமிக் ரிசர்ச் சென்னை ராஜ்ய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு இந்தச் சிபார்சை செய்திருக்கிருர் கள். இது பற்றிய முடிவு டீப் ஸீ ஹார்பர் வந்தபிறகு எடுக்கப் படும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

Road Safety Patrols

* 466 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any scheme has been envisaged to train Junior Traffic patrols, from out of students selected from High Schools in Madras City; and

(b) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Yes.

(b) The Traffic Branch of the Madras City Police has drawn up a scheme of forming School Road Safety Patrols for school children; and the scheme will be given effect to in all schools situated on crowded roads having heavy traffic. The idea is to train the senior students, both boys and girls of High Schools, in traffic signals and how to cross pedestrian crossings on roads, observing traffic signals. The students trained in School Road Safety Patrols will control the movements of other school children in front of their own schools for half an hour before and half an hour after school hours.

திரு. அ. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை மற்ற பெரிய நகரங்களிலும் கொண்டுவர சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது முதலிலே சென்னையில் பரீட்சார்த்தமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதுபற்றிய முடிவு இன்னும் எடுக்கவில்லை.